நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.82/2019

<u>அ.சா: 8 (LW 8)சாட்சியின் சான்றுரை</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வரதராஜன் | சாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| வட்டம் | : | வயது | : |

10.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

**1, 2, 5 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்பொழுது கோட்டூரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியாது. எதிரிகள் அன்பழகன், பிரவீன் யார் என்று தெரியாது. கடந்த 19.12.2016ம் தேதி வீரபாண்டி காவல் நிலையத்தில் பணிபுரியும் தலைமை காவலர் எனது வீட்டிற்கு வந்தார். அதிகாலை சுமார் 04.00 மணிக்கு எனது வீட்டிற்கு வந்து எனது இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணை கேட்டார். அதன் பதிவெண் TN 60 B 4111 ஸ்பிளெண்டர் பிளஸ் இருசக்கர வாகனம் என்று அவரிடம் கூறினேன். எனது இருசக்கர வாகனத்தை ராஜ்குமாருக்கு கொடுத்திருந்தேன். தலைமை காவலர் என்னிடம் எனது இருசக்கர வாகனத்தை பயன்படுத்தி ஒரு திருட்டு சம்பவம் நடந்ததாக என்னிடம் கூறினார். நான் காவல் நிலையம் சென்று அங்கிருந்த எனது இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டினேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:02:44 +0530

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:02:52 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 10.07.2026

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.82/2019

அ.சா: 9 (LW 9)சாட்சியின் சான்றுரை

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : மருதபாண்டி. | | சாதி | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | மதம் | : |
| வட்டம் | : | | வயது | : |

10.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

**1, 2, 5 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை:

நான் பொம்மையகவுண்டன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் 5 ஸ்டார் ஹோம் பைனான்ஸ் கம்பெனியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். எதிரிகள் பிரவீன், அன்பழகன் ஆகியோர்களை எனக்கு தெரியாது. 2016ம் வருடம் நான் கோழி கடை நடத்தி வந்தேன். எதிரிகள் வீரேஸ், சிவனேஸ், குமரேசன் ஆகியோர்கள் எனது கடைக்கு அடிக்கடி வந்து செல்வார்கள். ஆஜர் எதிரிகள் ஒயின்ஷாப்பில் பிரச்சனை செய்ததாக போலீசார் என்னிடம் கூறினார். மற்றப்படி வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:02:57 +0530

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கோரப்பட்டு, நீதிமன்ற அனுமதியுடன் சாட்சியிடம் அரசு தரப்பிலான குறுக்கு விசாரணை

கடந்த 19.12.2016ம் தேதி எதிரி குமரேசன் எனது இருசக்கர வாகனமான கருப்பு கலர் பல்சர் ஆன TN 60 B 3224 என்ற வாகனத்தை என்னிடம் வாங்கி சென்று மற்ற எதிரிகளுடன் சேர்ந்து தர்மாபுரி ஒயின்ஷாப் கடையில் வேலை பார்க்கும் மேற்பார்வையாளர் மணிகண்டன் என்பவரிடமிருந்து மேற்கூரிய இருசக்கர வாகனத்தில் சென்று வழிப்பறி செய்ததாக கேள்விபட்டேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக நான் 06.01.2017ம் தேதி வீரபாண்டி காவல் நிலையம் சென்று மேற்கூரிய இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல. விசாரணையின்போது விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலமாக தந்துவிட்டு தற்பொழுது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:03:01 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 10.07.2026

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.82/2019

<u>அ.சா: 10 (LW 10)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஈஸ்வரன். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

10.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

-----------------------------------------------------------------

**1, 2, 5 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் அல்லிநகரத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் ஒர்க்ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். கடந்த 20.12.2016ம் வருடம் அதிகாலை சுமார் 03.00 மணியளவில் ஓடை பக்கத்தில் நடந்த சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>4ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

மணிகண்டன் என்பவரை எனக்கு தெரியும். ஆறுமுகதேவரை எனக்கு தெரியாது. அ.சா.11 செந்தில் எனது மருமகன் ஆவார். என்ன காரணத்திற்கு சம்பவ இடம் சென்றேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு போலீசார் விசாரணையில்


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:03:06 +0530

சொல்லவில்லை. நான் மணிகண்டனுடன் காவல் நிலையம் சென்றேனா என்றால் செல்லவில்லை. போலீசாருக்கு சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் அங்கு செல்லும்பொழுது கூட்டமாக இருந்ததா என்றால் ஆமாம். அங்கு சுமார் 10 நபர்கள் இருந்திருப்பார்கள். அந்த 10 நபர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:03:10 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 10.07.2026

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஜ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.82/2019

<u>அ.சா:11 (LW 11)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில் | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

10.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

**1, 2, 5 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தர்மாபுரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் அங்கு ஒர்க்ஷாப் நடத்தி வருகிறேன். கடந்த 20.12.2016ம் தேதி அதிகாலை 03.00 மணியளவில் ஊர் அருகே இருக்கும் ஓடை பக்கத்தில் போலீசார் பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள்.அதில் நான் கையொப்பம் இட்டேன். அ.சா.ஆ.4ஆன பார்வை மகஜரில் இருக்கும் 2ம் கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>4ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா.10 ஈஸ்வரன் எனக்கு மாமா முறை ஆவார். அ.சா.1 எனக்கும் மாமா உறவுமுறைதான். அ.சா.2 எனக்கு சித்தப்பா உறவு முறை ஆவார். எனது ஒர்க்ஷாப் ஆனது ஊருக்கு நடுவில் உள்ள தேவர் சிலை அருகில் உள்ளது. இந்த வழக்கு


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:03:15 +0530

சம்பந்தமான மணிகண்டன் என்பவருடன் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றுள்ளேன். என்னுடன் ஈஸ்வரன் வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். போலீசாரிடம் என்ன காரணத்திற்கு சம்பவ இடம் சென்றேன் விபரத்தை குறிப்பிட்டேனா என்றால் சொன்னேன். எனக்கு மணிகண்டன் மற்றும் அ.சா.1, அ.சா.10 ஆகியோர்கள் மாமா என்று போலீசார் விசாரணையின்போதும் சொன்னேன். நான் சம்பவ இடம் போகவும் இல்லை சம்பவ இடத்தில் வைத்து கையொப்பமும் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டுவிட்டு மணிகண்டன் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்பு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:03:20 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 10.07.2026